தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 5989/SCIC/2024**

திரு.க.கோதண்டன் - புகார்தாரர்
எண்.3, திரு.வி.க.தெரு,
சோழன் நகர்
திருமுல்லைவாயில், சென்னை - 600 062.
Phone:94446 49740.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி காவல் மாவட்டம்
சென்னை - 600 054.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **09.11.2024** |
| 2. | மனுதாரரின் புகார் மனு | 17.12.2024 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 09/11/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல துணை ஆணையர் அலுவலகம், ஆவடி, சென்னை-54 அவர்களுக்கு அனுப்பி, அதில் “1)COP 2813- 21.08.2024 (2) COP 2814 - 21/08/24 (3) COP 3273 - 18-09-2024 - தொடர்பாக - மேற்கண்ட தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள வரிசை எண். கொண்ட எனது புகார் மனுக்கள் மீது காவல் இணை ஆணையர் அவர்களால் என் புகார் மனு மீது எழுதப்பட்டுள்ள (Note files) குறிப்புகள் கொண்ட புகார் மனு ஆவண நகலை வழங்கவும்” என்பன போன்று 4 (நான்கு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு.க.கோதண்டன் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், தமிழ்நாடு

தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 8(2)-ன்படி அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியாக, திரு.A. அமீர் அகமது, காவல் உதவி ஆணையாளர், பூந்தமல்லி சரகம் அவர்கள் ஆஜராகி மனுதாரருக்கு 23/12/2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக இனம் வாரியான பதில்களையும், அது தொடர்பான ஆவணங்களின் நகல்களையும் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், தனக்கு மேற்சொன்ன தகவல் கிடைக்கப் பெற்றதாக ஒப்புக் கொண்டார். ஆனால் தனக்கு அளிக்கப்பட்ட பதிலில் இனங்கள் 2, 3 மற்றும் 4 ஆகியவற்றிற்கு சரியான தகவல் அளிக்கப்படவில்லை எனப் புகார் தெரிவித்தார். அதற்கு பிரதிநிதி தெரிவிக்கையில், இனம்-2-க்கு காவல் ஆய்வாளரின் விசாரணை அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றார். ஆனால், மனுதாரர், தனக்கு காவல் துணை ஆணையாளரின் விசாரணை அறிக்கை அனுப்பப்படவில்லை என ஆட்சேபித்தார். அதற்கு பிரதிநிதி தெரிவிக்கையில், காவல் துணை ஆணையாளர் விசாரணையினை நடத்தவில்லை என்பதால், அது போன்ற விசாரணை அறிக்கை அனுப்பவில்லை என்றதோடு, இனம்-4-க்கு அரசு ஆணையின் நகல் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். அதற்கு மனுதாரர், தனக்கு தகவல் தேவையில்லை என்றும் நடவடிக்கைதான் வேண்டும் என முறையிட்டார்.

**3. எனவே, அப்போதைய (09/11/2024 தேதிய) பொதுத் தகவல் அலுவலர் Thiru.AIMAN JAMAL, I.P.S., (தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர், செங்கல்பட்டு மாவட்டம்) அவர்கள், குறித்துரைக்கப்பட்ட 30 தினங்களுக்குள் தகவல் அளிக்காமல் சிறிது காலதாமதத்துடன் தகவல் அளித்தமைக்காகவும், இனங்கள் 2 மற்றும் 3 ஆகியவற்றிற்கு முழுமையற்ற தகவல் அளித்தமைக்காகவும், தகவல் பெறும் உரிமைச் சட்டம் - 2005, பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை மேற்கொள்ளக் கூடாது என்பதற்கான காரண விளக்கத்தை நேரடியாகவோ அல்லது அன்னாரின் பிரதிநிதி வாயிலாகவோ 30/09/2026 அன்று ஆணையத்தில் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 5989/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
காவல் துணை ஆணையாளர்
ஆவடி காவல் ஆணையரகம்
ஆவடி காவல் மாவட்டம்
சென்னை - 600 054.

2. Thiru.AIMAN JAMAL, I.P.S.,
பொதுத் தகவல் அலுவலர்
(தற்போது மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்,
செங்கல்பட்டு மாவட்டம்

**புகார்தாரர்**
திரு.க.கோதண்டன்
எண்.3, திரு.வி.க.தெரு,
சோழன் நகர்
திருமுல்லைவாயில், சென்னை - 600 062.
Phone:94446 49740.

நகல்
1.காவல்துறை தலைமை இயக்குநர்
காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம்
மயிலாப்பூர், சென்னை-600 004.

2.பதிவாளர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை-600 035.

RG/Sr.PC